<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>

**அசல் வழக்கு எண். 115 /2020 வா.சா.1**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 03–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: ராகினி என்ற ராகினி அம்மாள் | தந்தை பெயர்: ராஜன் |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

<u>03.03.2026</u>

<u>2 , 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:</u>

1. தாவாச் சொத்து எனது கிரையச் சொத்தாகும் . தாவாச் சொத்தின் சர்வே எண் 143 ஆகும். தாவாச் சொத்தை நான் அழகு என்ற இரத்தினம் என்பவரிடமிருந்து கிரைய பெற்றேன். 10 செண்டு கிரையம் பெற்றேன். தாவாச் சொத்தானது புஞ்செய் இடமாகும். நான் கிரையம் பெறும் போது மொத்தம் 24 செண்டு இருந்தது. நான் 1983 ல் கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற போது இடமாக இருந்தது . எனக்கு நான்குமால் தெரியும் திசை தெரியாது . நான் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே சாந்தகுமார் கிரையம் பெற்றுவிட்டார். அவர் 10 செண்டு கிரையம் பெற்றுள்ளார். எனது அம்மா தான் இருவருக்கும் கிரையம் பெற்று கொடுத்தார்.

2. பேரூராட்சி அனுமதி கொடுத்ததால் வீடு கட்டினேன் . என்னிடம் காட்டப்படும் பிளான் அப்ரூவலில் சர்வே நம்பர் திருத்தம் உள்ளது . தாவாச்சொத்திற்கு பிளான் அப்ரூவல் கொடுத்த பேரூராட்சியை ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது . தாவா வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பினோம் . பிரதிவாதிகள் வெளிநாட்டில் இருந்ததால் திரும்பி வந்தது . மேற்படி அறிவிப்பு திருப்புகை கவரை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது.

3. 1ம் பிரதிவாதியின் கிரையம் ஆவணம் முந்திய ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் நான்குமாலை சரிபார்த்து நான் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் எனது அம்மா சரிபார்த்து வாங்கினார். என்னுடைய ஆவணத்தில்

நான்குமாலில் பிரகாஷ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல . பிரதிவதிகள் போட்ட பத்திரங்கள் செல்லாது என்று நான் எவ்வித பரிகாரமும் கோரவில்லை.